23rd January 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

அவர்கள், அந்த இலாகாவிற்கு பொறுப்புள்ள அமைச்சர், ஒன்றும் உறுதியான பதில் சொல்லவில்லை. ஆகையினால்தான் நான் அதை ஒரு உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. உரிமைப் பிரச்சினை என்பதனால் ஒருக்கால் முதல் அமைச்சர் பதில் சொல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், அந்த சட்டங்கள் சம்பந்தப்பட்ட செலவுகளுக்கு அதிகாரிகளை நியமிக்க இந்த மசோதாவில் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் நல்ல விஷயமாக இருக்கக்கூடிய அந்த விஷயத்தில் நம் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதைப்பற்றி இப்பொழுதே சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே இந்த உப மானியக் கோரிக்கையின் பேரில் நடந்த பொது விவாதத்தின்போது கனம் அங்கத்தினர் இதைக் குறிப்பிட்டார்கள். நானும் என் தாளிலே குறித்து வைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அன்று மிகவும் நேரம் ஆகிவிட்டது. எல்லோருக்கும் பசி எடுத்து விட்டது போல் இருந்தது, எனக்குப் பசி இல்லை என்றாலும், தாமதம் ஏற்படக்கூடாது என்பதுதான் எங்கள் எண்ணம், இலாகாக்களுக்கும் சொல்லுகிறோம். ஆனால், இனம் சட்டங்களைப் பொருத்த வரையில் பல சிக்கல்கள் இருக்கின்றன. பின்னால் கோர்ட்டில் மாறுபட்ட அபிப்பிராயம் கொடுக்க இடம் இல்லாமல் செய்ய வேண்டும். தாமதம் என்றாலும், தவிர்க்கக் கூடிய தாமதம் ஏற்படாது என்று கூறிக்கொண்டு முடிக்கிறேன்.

MR. SPEAKER: The question is—

'That the Madras Appropriation Bill, 1965 (L.A. Bill No. 2 of 1965) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

II. POINTS OF ORDER—*cont.*

(2) DELAY IN FURNISHING INFORMATION BY THE DEPARTMENTS.

திரு. மீ. கலியாணசுந்தரம்: On a point of order, Sir, there is another item, Item V, in the agenda. அதை நான் ஆட்சேபிக்கவில்லை. இதே விஷயத்தை ஆறு மாதத்திற்கு முன் நானே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதை நான் வரவேற்கிறேன். எற்காடு பகுதியை டவுன்ஷிப்பாகச் செய்வதில் சந்தோஷம். ஆனால், சம்பந்தப்பட்ட இலாகாவினர் அலட்சியமாக இருப்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுவும் ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டுதான். குறுகிய கால கேள்விக்குக்கூட உடனடியாகப் பதில் அனுப்புவதில்லை. சட்ட சபை கூடப் போகிறது என்பது ஒரு மாதத்திற்கு முன்பே தெரிந்து விடுகிறது. குறைந்த பட்சம் 15 நாட்களுக்கு முன்பே அங்கத்தினர்களுக்கு எல்லாம் அறிவிக்கப்படுகிறது, அவர்களும் நோட்டீசுகள், தீர்மானங்கள் இவற்றை அனுப்புகிறார்கள். அப்படி சபைக் கூட்டம் அறிவிக்கப்பட்ட

பிறகு இலாகாக்கள் தாங்கள் சபைக்கு என்னென்ன அனுப்ப வேண்டும், தாங்கள் அனுப்பவேண்டிய தீர்மானங்கள் மசோதாக்கள், ஸ்டேட்மெண்டுகள் என்னென்ன என்று விசேஷக் கவலையோடு கவனித்து மந்திரிகளுக்குக் கொடுத்திருந்தால், அவகாசம் இருந்திருக்கும், சபையில் அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல சந்தர்ப்பம் இருந்திருக்கும். ஆனால், மற்ற நிகழ்ச்சிகள் இருப்பதால், நேரம் இல்லாமல் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நெருக்கடியை இலாகாவினர் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே இதைப்பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்களும், கனம் சபாநாயகர் அவர்களும், நடவடிக்கை எடுத்து எல்லா இலாகாக்களும் அதிகச் சிரத்தையோடு சட்ட சபை நிகழ்ச்சிகளுக்கு வேண்டிய விஷயங்களைத் தயாரிப்பதில் கவனத்தோடு நடந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்றும், இப்படிப்பட்ட சங்கடத்தை உண்டாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் சொன்னதை இலாகாவினர் கவனித்து அதற்குத் தகுந்தபடி நடந்துக் கொள்வார்கள்.

X. GOVERNMENT RESOLUTION

CONSTITUTION OF A TOWNSHIP FOR THE SHEVAROYS PANCHAYAT TOWN.

* THE HON. SRI S. M. A. MAJID : Sir, I move the following resolution—

"That in pursuance of sub-section (1) of section 4 of the
10-00 a.m. Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958), the House do resolve that the Shevaroys Panchayat Town in the Salem district which is a health resort and an industrial colony be declared to be a township."

The Shevaroy Hills constitute the present Yercaud sub-taluk. As far as the Revenue administration is concerned, there is an independent Deputy Tahsildar for the sub-taluk with the usual revenue staff. The Shevaroys Town Panchayat consisting of nine tariffs is the unit of local administration for the area. It has a population of 24,006 as per the 1961 census and covers a total area of 147.5 square miles. It has an average annual income of Rs. 1,70,000. A good part of the population comprises tribal people, commonly known as Malayalees. There is an Executive Officer in charge of Town Panchayat. One Panchayat Union with the name "Yercaud Panchayat Union" is also functioning for the same area. The vastness of the area and certain special features of this Hill region require administration by a special authority. It has been considered that, for the better administration of the area and implementation of the "Tribal Development Scheme" and other programmes, a Township Committee consisting of both official and non-official members will be better suited than a panchayat consisting only of non-official members.